**Starting time 12.12 P.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.244/2012**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 22.04.2024 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ரமேஷ் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>** தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 810 ச.அடி என்றால், இல்லை. 15-க்கு 27 என்னுடைய பங்கு மட்டும். தாவா சொத்தை ஒட்டி அமைந்துள்ள 810 ச.அடி நிலத்திற்காக சுகந்தி என்பவர் அசல் வழக்கு எண். 243/2013 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், ஆமாம். அது என்னுடைய சொத்திற்கு ஒட்டியுள்ள சொத்து. இந்த வழக்கின் சொத்தும் சுகந்தி தாக்கல் செய்த வழக்கு சொத்தும் ஆரம்பத்தில் பெருமாள் ரெட்டி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால், சரியல்ல.

2. தாவா சொத்தும் சுகந்தி தாக்கல் செய்துள்ள வழக்கின் சொத்தும் ஆரம்பத்தில் பெருமாள் ரெட்டியார் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றாலும், எனக்கு நன்கு தெரிந்திருந்தும் நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அந்த பெருமாள் ரெட்டியாருக்கு ராஜு மற்றும் ராமன், லட்சுமணன் என்ற 3 மகன்கள் என்றால், எனக்கு அவர்களை தெரியாது. எனக்கு தெரியும் என்றாலும், நான் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக கூறுகிறேன் என்றாலும், சரியல்ல.

3. தாவா சொத்தும் சுகந்தி வாங்கிய சொத்தும் ஆரம்பத்தில் பெருமாள் ரெட்டிக்கு சொந்தமான கூரை வீடாக இருந்தது என்றாலும், அதனை ராஜு, ராமன், லட்சுமணன் மூவரும் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றாலும், சரியல்ல. அதில் வடபுறம் ராஜுக்கும், நடுவில் ராமனுக்கும், தென்புறத்தில் லட்சுமணனுக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால், இல்லை. அவ்வாறு பாகம் பிரித்துக் கொண்டு அவர்கள் அனுபவித்து வந்தது குறித்து எனக்கும் என் பெற்றோர்களுக்கும் நன்கு தெரியும் என்றாலும், நான் தற்போது வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக கூறுகிறேன் என்றாலும், சரியல்ல.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

Ending Time: 12.19 P.M.

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**